இந்தியா மீதான குற்றச்சாட்டு

கனடாவுக்கு ஆதரவுக் கரம் நீட்டாத மேற்கத்திய நாடுகள்

புது தில்லி/ டொரன்டோ, செப். 20: காலிஸ்தான் பயங்கரவாதி கொலையில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியா மீது நேரடியாக குற்றம்சாட்டியுள்ள நிலையில், அதன் நெருங்கிய நட்பு வட்டத்தில் உள்ள அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து ஆகியவை கனடாவுக்கு ஆதரவு அளிக்கத் தயக்கம் காட்டி வருகின்றன.

கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து ஆகிய 5 நாடுகளும் 'ஃபைவ் ஐ அலையன்ஸ்' என்ற பெயரில் உளவுத் தகவல்களைத் தங்களுக்குள் பகிர்ந்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக கனடாவின் சிபிசி ஊடக நிறுவனம் வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது: கனடா-இந்தியா இடையிலான மோதல் போக்கை அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து ஆகிய நாடுகள் விரும்பவில்லை. கனடா பிரதமர் நாடாளுமன்றத்தில் வைத்து இந்தியா மீது பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ள நிலையிலும், இந்த விஷயத்தில் முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என்றே அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகியவை கூறியுள்ளன.

தங்களிடம் போதிய ஆதாரம் உள்ளது என்ற அடிப்படையில்தான் பிரதமர் இந்தியா மீது குற்றச்சாட்டை கனடா முன் வைத்தார்.

ஆனால், அதையும் தாண்டி விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா போன்ற நாடுகள் கூறியிருப்பது, அவர்கள் இந்த விவகாரம் பெரிதாவதை விரும்பவில்லை என்பதையே காட்டுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு மேற்கத்திய நாடுகளின் ஆதரவு கிடைக்கவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

விலகி நிற்கும் நாடுகள்: மேலும், ஆஸ்திரேலியா தரப்பில் பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி கனடாவின் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார். அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் மட்டுமே கருத்துக் கூறியுள்ளார். அவரும் முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என்பதுடன் முடித்துக் கொண்டார்.

தில்லியில் உள்ள கனடா தூதரகம்.

பிரிட்டனும், இந்த விவகாரத்தில் அதிகாரபூர்வமாக எந்தக் கருத்தையும் கூறவில்லை. அந்நாட்டு வெளியுறவுச் செயலர் இந்தியாவின் பெயரைக் குறிப்பிடாமல் 'எக்ஸ்' வலைதளத்தில் ஒரு பதிவை வெளியிட்டு இந்த பிரச்னையில் இருந்து விலகியுள்ளார். மேலும், கனடா கூறியுள்ள குற்றச்சாட்டால் இந்தியாவுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சு பாதிக்கப்படாது என்றும் பிரிட்டன் அறிவித்தது.

இந்த விஷயத்தில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு நெருக்கடி அளிக்கும் வகையில், இந்தியா மீதான குற்றச்சாட்டு குறித்து தன்னிடம் உள்ள அனைத்து ஆதாரங்களையும் வெளியிட வேண்டும் என்று கனடா எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

விளக்கமளித்த ட்ரூடோ: இதனிடையே, இந்தியா மீதான தனது குற்றச்சாட்டு குறித்து மீண்டும் விளக்கமளித்த ஜஸ்டின் ட்ரூடோ, 'இந்தியாவுடனான உறவை மோசமாக்க விரும்பவில்லை. இந்தியாவை கோபப்படுத்த வேண்டும் என்று எதையும் பேசவில்லை. கனடா அரசு தெரிந்து கொண்ட சில தகவல்களைப் பகிர்ந்துகொண்டோம். சில விஷயங்களை தெளிவுபடுத்திக்கொள்ள இந்தியாவுடன் இணைந்து செயல்படத் தயாராக இருக்கிறோம்' என்று கூறியுள்ளார்.

இந்திய தூதரக உயரதிகாரி வெளியேற கனடா உத்தரவிட்டதையடுத்து, இந்தியாவும் பதிலடி நடவடிக்கையாக கனடாவைச் சேர்ந்த தூதரக உயரதிகாரி வெளியேற உத்தரவிட்டது. இதையடுத்தே, ஜஸ்டின் ட்ரூடோ இவ்வாறு விளக்கமளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்காத கனடா: மேலும், கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவான 9 பிரிவினைவாத அமைப்புகள் மிகவும் சுதந்திரமாகச் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவில் பஞ்சாபி பாடகர் மூஸே வாலா கொலை உள்பட பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் தொடர்புடையவர்கள் கனடா மண்ணில் சுதந்திரமாகச் செயல்படுகின்றனர்.

பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்புடன் தொடர்புடையவர்களும் கனடாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களால் உலகின் பல நாடுகளுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகளும் கனடாவில் இருந்து செயல்படுகின்றனர்.

இது தொடர்பாக இந்தியா பலமுறை ஆதார ஆவணங்களை அளித்தும் பல ஆண்டுகளாக கனடா எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கனடா செல்லும் இந்தியர்களுக்கு எச்சரிக்கை அவசியம்

மத்திய அரசு அறிவுறுத்தல்

புது தில்லி, செப். 20: கனடா நாட்டின் சில பகுதிகளில் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அங்கிருக்கும் மற்றும் அந்தநாட்டுக்குச் செல்லத் திட்டமிட்டிருக்கும் இந்தியர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுமாறு மத்திய அரசு அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

காலிஸ்தான் பிரிவினைவாத பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கனடாவில் கடந்த ஜூன் மாதம் கொல்லப்பட்டதில் இந்திய உளவு அமைப்புகளின் தொடர்பு உள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியதால், இரு நாடுகளுக்கு இடையேயான உறவு பாதிக்கப்பட்டுள்ளதைத்தொடர்ந்து இந்த எச்சரிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் புதன்கிழமை வெளியிட்ட அறிவுறுத்தலில் கூறியிருப்பதாவது:

கனடாவில் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளும், அரசியல் ரீதியிலான வெறுப்புக் குற்றங்களும், வன்முறைகளும் அதிகரித்துவரும் சூழலில், அந்த நாட்டில் வசிக்கும் மற்றும் அங்கு செல்லத் திட்டமிட்டிருக்கும் இந்தியர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

அண்மைக்காலமாக, இந்தியாவுக்கு எதிரான செயல்பாடுகளை எதிர்க்கும் அங்குள்ள இந்தியச் சமூகத்தினருக்கும், இந்திய தூதரக அதிகாரிகளுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, இதுபோன்ற அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைகள் நடைபெற சாத்தியமுள்ள கனடாவின் பகுதிகள் மற்றும் மாகாணங்களுக்குச் செல்வதை இந்தியர்கள் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கனடாவில் நிலவிவரும் மோசமான பாதுகாப்பு சூழலைக் கருத்தில்கொண்டு, அங்குள்ள இந்திய மாணவர்களும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கனடாவில் வசிக்கும் இந்திய சமூகத்தினரின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த கனடா அதிகாரிகளுடன் இந்திய தூதரக அதிகாரிகள் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகின்றனர் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வலைதளப் பதிவு: 'அவசர சூழ்நிலைகளில் தூதுரக அதிகாரிகள் எளிதில் தொடர்புகொண்டு உதவ வசதியாக, கனடாவில் வசிக்கும் இந்தியர்களும் இந்திய மாணவர்களும் தங்களின் விவரங்களை கனடாவின் ஒட்டாவாவில் உள்ள இந்திய துணைத் தூதரகம் அல்லது டொரன்டோ மற்றும் வான்கோவரில் உள்ள இந்திய தூதரங்களில் அல்லது http://madad.gov.in என்ற வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டும்' என்றும் வெளியுறவு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

பெண் குழந்தைகளுக்கான சிபிஎஸ்இ கல்வி உதவித் தொகை

விண்ணப்பிக்க அக். 18 கடைசி

புது தில்லி, செப். 20: பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற ஒற்றை பெண் குழந்தைகள் கல்வி உதவித் தொகை பெற அக். 18-க்குள் விண்ணப்பிக்கலாம் என மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சிபிஎஸ்இ) தெரிவித்துள்ளது.

குடும்பத்தில் ஒரே குழந்தையாக இருந்து கல்வியில் சிறந்து விளங்கும் மாணவிகளின் கல்வி மேம்பாட்டுக்காக இந்த கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் நிகழாண்டுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. இதுகுறித்து சிபிஎஸ்இ வெளியிட்ட அறிவிப்பு:

சிபிஎஸ்இ கல்வி வாரியத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்று பிளஸ்-1 வகுப்புக்குச் சென்றிருக்கும் ஒற்றை பெண் குழந்தைகளிடமிருந்து, கல்வி உதவித் தொகைக்கான இணையவழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதுபோல, 2022-ஆம் ஆண்டில் இந்த கல்வி உதவித் தொகையைப் பெற்ற மாணவிகளிடமிருந்து, கல்வி உதவித் தொகை திட்ட புதுப்பித்தல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த விண்ணப்பங்களை இணையவழியில் சமர்ப்பிக்க அக்டோபர் 18 கடைசி நாளாகும். மேலும் விவரங்களுக்கு www.cbse.gov.in வலைதளத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலிஸ்தான் விவகாரம் எதிரொலி: கனடா பாடகரின் இந்திய நிகழ்ச்சி ரத்து

புது தில்லி, செப். 20: கனடாவைச் சேர்ந்த பஞ்சாபி 'ராப்' இசைப் பாடகர் சுப்நீத் சிங்கின் இந்திய நிகழ்ச்சியை ரத்து செய்வதாக அதை ஏற்பாடு செய்திருந்த 'புக் மை ஷோ' நிறுவனம் அறிவித்துள்ளது.

கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் கடனா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியா மீது குற்றம்சாட்டியதால், இரு நாடுகள் இடையிலான உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கனடாவைச் சேர்ந்த பஞ்சாபி பாடகர் சுப்நீத் சிங் இந்தியாவில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இசை நிகழ்ச்சிக்கு சமூக வலைதளங்களில் எதிர்ப்பு கிளம்பியது.

ஏனெனில், அந்தப் பாடகர் காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தீவிர ஆதரவாளராவார். தன்னை 'காலிஸ்தானி' என்றே குறிப்பிட்டு வருகிறார்.

இந்நிலையில், கனடா பஞ்சாபி பாடகரின் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்த 'புக் மை ஷோ' நிறுவனத்தைப் புறக்கணிக்கக் கோரும் பதிவுகள் சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டன.

இதையடுத்து, பாடகர் சுப்நீத் சிங்கின் இந்திய நிகழ்ச்சியை ரத்து செய்வதாகவும், அந்த இசை நிகழ்ச்சிக்கு முன்பதிவு செய்தவர்களுக்கு ஒரு வாரத்தில் பணம் திரும்ப அளிக்கப்படும் என்றும் 'புக் மை ஷோ' நிறுவனம் அறிவித்துள்ளது.

காலிஸ்தான் பிரிவினைவாத பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் (45) கனடாவில் கொல்லப்பட்டதில் இந்திய உளவாளிகளின் பங்கு உள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார்.

இதைத் தொடர்ந்து, அந்நாட்டில் உள்ள இந்திய தூதரக மூத்த அதிகாரி வெளியேறுமாறும் கனடா உத்தரவிட்டது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இந்திய அரசு, பதிலடியாக இந்தியாவில் உள்ள கனடா தூதரக உயரதிகாரி வெளியேற உத்தரவிட்டது.

சத்தீஸ்கர்: என்கவுன்ட்டரில் 2 பெண் நக்ஸல்கள் சுட்டுக் கொலை

ராய்பூர், செப். 20: சத்தீஸ்கரின் தண்டேவாடா மாவட்டத்தில் காவல் துறையுடன் நிகழ்ந்த மோதலில் 2 பெண் நக்ஸல்கள் புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சத்தீஸ்கரின் தண்டேவாடா-சுக்மா மாவட்டங்களுக்கு இடையிலான எல்லைப் பகுதியில் அமைந்துள் நாகாராம்-போரோ ஹிர்மாவனப் பகுதியில் தடை செய்யப்பட்ட நக்ஸல் அமைப்பினர் பதுங்கியிருப்பதாக போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, அந்தப்பகுதி முழுவதையும் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த மாவட்ட ஆயுதப் படை போலீஸார், நக்ஸல் அமைப்பினருக்கு எதிரான தேடுதல் நடவடிக்கையை புதன்கிழமை அதிகாலை தொடங்கினர்.

அப்போது, காலை 7 மணியளவில் இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

இந்த மோதலின்முடிவில், 2 பெண் நக்ஸல்களின் உடல்கள் கண்டறியப்பட்டன. அவர்கள் வசமிருந்த துப்பாக்கிகளும் மீட்கப்பட்டன. தொடர்ந்து, அப்பகுதியில் தேடுதல் பணி நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெடிகுண்டு தாக்குதலில் சிஆர்பிஎஃப் எஸ்.ஐ. காயம்: சுக்மா மாவட்டத்தில் நக்ஸல் அமைப்பினர் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டு வெடித்த சம்பவத்தில் மத்திய ஆயுதக் காவல் படை (சிஆர்பிஎஃப்) உதவி ஆய்வாளர் சாகர் சிங் தோமர் காயமடைந்தார்.

புதன்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், ஜாகர்குந்தா காவல் நிலையப் பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்த அவரின் காலில் காயம் ஏற்பட்டது. அவர் தண்டேவாடா நகர மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தியா-கனடா ராணுவ ஒத்துழைப்பை பாதிக்காது: இந்திய ராணுவம் உறுதி

புது தில்லி, செப். 20: இந்தியா மற்றும் கனடா இடையே காலிஸ்தான் விவகாரத்தால் நடந்து வரும் ராஜிய மோதல் எவ்விதத்திலும் இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பை பாதிக்காது என இந்திய ராணுவ வட்டாரங்கள் உறுதிபடத் தெரிவித்தன.

இந்திய ராணுவத்தின் சார்பில் வரும் 26, 27-ஆகிய தேதிகளில் தில்லியில் நடைபெறவுள்ள 'இந்தோ-பசிபிக் பிராந்திய ராணுவ தலைமைத் தளபதிகள் மாநாட்டில் (ஐபிஎசிசி) கனடா நாட்டின் ராணுவத் தலைமைத் தளபதி பங்கேற்பதில் சந்தேகம் எழுந்த நிலையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் தொடரும் சீன ஆதிக்கம் குறித்து உலகளாவிய கவலை எழுந்துள்ள சூழலில், பிராந்தியத்தின் அமைதி, வளம் மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் நோக்கில் அமெரிக்காவுடன் இணைந்து இந்தியா இந்த மாநாட்டை நடத்துகிறது. 22 நாடுகள் சார்பாக 15 ராணுவத் தலைமைத் தளபதிகள் மற்றும் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

இதனிடையே, கனடாவில் காலிஸ்தானி பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் கொலை செய்யப்பட்டதில் இந்திய உளவாளிகளின் பங்கு இருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். கனடா பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டுக்கு இந்தியா திட்டவட்டமாக மறுப்பு தெரிவித்தது. இதனால், இரு நாடுகளின் ராஜிய உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் காரணமாக இந்தியா நடத்தும் ராணுவ மாநாட்டில் கனடா ராணுவ தலைமைத் தளபதி பங்கேற்பது குறித்து சந்தேகம் எழுந்தது. இதுதொடர்பாக இந்திய ராணுவத் தலைமையகத்தில் பணியாற்றும் உத்தி திட்டமிடல் பிரிவு கூடுதல் இயக்குநர் அபிநயா ராய் அளித்த விளக்கத்தில், 'இந்தியா மற்றும் கனடா இடையே நடந்து வரும் மோதல், இருதரப்பு ராணுவ ஒத்துழைப்பை எந்த விதத்திலும் பாதிக்காது. தில்லி மாநாட்டில் கனடா நாட்டு ராணுவத் தலைமைத் தளபதி நிச்சயம் பங்கேற்பார்.

சீனா உள்பட நமது அண்டை நாடுகளுடன் மோதல் போக்கு நிலவி வந்தாலும், அந்த நாடுகளுடன் ராணுவம், ராஜிய நிலைகளில் நல்லுறவில் நாம் எப்போதும் ஈடுபட்டு வருகிறோம். அந்த வகையில், கனடா மற்றும் இந்தியா இடையிலான தற்போதைய மோதலால் இருதரப்பு ராஜிய மற்றும் ராணுவ உறவுகள் பாதிக்காது' என்றார்.

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.
பெருநிறுவன அடையாள எண் (CIN): U67100TZ2014PTC020363
பெருநிறுவன அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
தொ.பே.: 022–26544000, மின்னஞ்சல்: Mumbai@omkaraarc.com, தொ.பே.: 022–26544000, அதிகாரப்பூர்வ அலுவலர் கைப்பேசி எண்: +91 98840 62068, +91 93446 84194
பதிவு அலுவலகம்: எண் 9, M.P. நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் – 641607.

[இணைப்பு–IV–A] [பார்க்க விதி 8(6) & 9(1)] அசையாச் சொத்தின் E–ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("SARFAESI சட்டம்") அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E–ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளதும் **ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்., (OARPL)** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தினை e–ஏல முறையில் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. **மேலும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) (ஓம்காரா PS 33/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்)** நிறுவனமானது கீழ்க்காணும் கணக்குகள் தொடர்பான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 30.03.2021 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி எடெல்வெய்ஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட் நிறுவனத்திடமிருந்து (ஒப்படைப்பு நிறுவனம்) தொடர்புடைய கடனீட்டுச் சொத்துக்களுடன் சேர்த்துத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்கிணங்க **OARPL** நிறுவனமானது ஒப்படைப்பு நிறுவனத்தின் சார்பாகக் களமிறங்கிக் கடன்களைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்து மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது. அதையடுத்து **OARPL** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் ஒப்படைப்பு நிறுவனத்திடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுச் சொத்தின் நேரடி சுவாதீனத்தைக் கையகப்படுத்தியுள்ளார். இந்நிலையில் **OARPL** நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடன்களைத் திரும்பப் பெறும் பொருட்டுக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துக்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளார். இந்நகர் சொத்துக்கள் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும் கூட்டுக் கடன்தாரர்(கள்) ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம் எனும் முறையில் **OARPL** நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் கீழே தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான தொகையைத் திரும்பப் பெறும் வகையில் **SARFAESI** சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) ஆகியவற்றின் கீழான உரிமைகள் மற்றும் அதிகாரங்களின்படி "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்), கடனீட்டுச் சொத்துக்கள், நிலுவைத் தொகைகள், பிரிவு 13(2)–இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் நாள், சுவாதீன நாள், குறைந்தபட்ச விலை, ஏல உயர்வுத் தொகை, டேவணித்தொகை **(EMD)**, ஆய்வு நாள் மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) பெயர்: திருமதி விக்டோரியாராணி F மற்றும் பிரான்சிஸ் சேவியர்		
கடனீட்டுச் சொத்தின் விவரங்கள்: சங்கரிகிரி சார்பதிவு அலுவலகத்துக்கு உட்பட்ட 08.11.2013 நாளிட்ட விற்பனை ஆவண எண் 3623/2013–இன்கீழ் திருமதி விக்டோரியாராணி, க/பெ. திரு. பிரான்சிஸ் சேவியர் அவர்களின் சொத்து. சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், சங்கரிகிரி சார்பதிவு அலுவலக வட்டாரம், கொமாரபாளையம் வட்டம், படைவீடு கிராமத்தில் உள்ள **SF** எண் 92, புஞ்சை ஏக்கர் 17.15, கிஸ்தி ரூ.38.59 மற்றும் தற்போதைய உட்பிரிவுப்படி **SF** எண் 92/17, புஞ்சை ஹெக்.0.84.0 கிஸ்தி ரூ.4.67, இதிலடங்கிய 2.08 ஏக்கர் கொண்ட நிலம். இதிலடங்கிய 1.18 ஏக்கர் நிலம் வீட்டு மனை இடங்களாகப் பிரிக்கப்பட்டு மற்றும் சாலைகள் முதலானவை அமைக்கப்பட்டது. இதிலடங்கிய அட்டவணைச் சொத்து மனை இட எண் 14. எல்லைகள் பின்வருமாறு: ராமாயி அவர்களின் மனை **CP** எண் 13– க்குக் கிழக்கில், ராஜேஸ்வரி அவர்களால் வாங்கப்பட்டச் சொத்துக்களுக்கு மேற்கு மற்றும் வடக்கில், 20 அடி அகலமுள்ள கிழக்கு மேற்குச் சாலைக்குத் தெற்கில். **அளவுகிழக்கு மேற்காக வடக்கில் – 22 அடி, கிழக்கு மேற்காகத் தெற்கில் – 22–1/4 அடி, வடக்குத் தெற்காக கிழக்கில் – 33 அடி, வடக்குத் தெற்காக மேற்கில் – 32–1/2 அடி.** மேற்படி அளவுகளுக்கேற்ப பரப்பளவு 724–1/2 சதுர அடி கொண்ட காலி மனை இடம் மற்றும் அங்கு கட்டப்பட்டுள்ள வீட்டுக் கட்டடம் உட்பட. இத்துடன் பொதுச் சாலைகள் முதலானவற்றை பயன்படுத்தும் உரிமைகள் சேர்த்து.		
சொத்தின் உரிமையாளர்: திருமதி விக்டோரியாராணி F	**கோரிக்கை அறிவிப்பு நாள்: 15.06.2020**	**நேரடி சுவாதீன நாள்: 06.01.2022**
குறைந்தபட்ச விலை (இலட்சத்தில்): ரூ.4,85,000/– (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்)		**டேவணித்தொகை (EMD):** ரூ.48,500/– (ரூபாய் நாற்பத்தெட்டாயிரத்து ஐந்நூறு மட்டும்)
ஏல உயர்வுத் தொகை: ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)		**சொத்து ஆய்வு நாள் மற்றும் நேரம்: 30.09.2023** அன்று நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை
15.09.2023 நாள்படி நிலுவைத்தொகை: ரூ.16,25,532/– (ரூபாய் பதினாறு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து ஐந்நூற்று முப்பத்திரண்டு மட்டும்)		
கணக்கு எண்: 344905001015, பயனாளர் பெயர்: ஓம்காரா **PS33/2020–21** டிரஸ்ட், **வங்கியின் பெயர்: ICICI** வங்கி, **கிளை:** பாந்த்ரா (கி), மும்பை, **IFSC** எண்: **ICIC0003449.**		**E–ஏல நாள் மற்றும் நேரம்:** 25.10.2023 வியாழக்கிழமை முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில்
ஏலத்தில் கலந்து கொள்வதற்கான ஏலப்புள்ளிக் கடிதம் / வாடிக்கையாளர் விவர (KYC) ஆவணம் / டேவணித்தொகைக் (EMD) சான்று தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்: 21.10.2023 அன்று மாலை 4:00 மணி வரை அல்லது அதற்குமுன்.		

ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த **(OARPL)** நிறுவனத்தின் **http://omkaraarc.com/auction.php** எனும் இணையத்தளத்தில் அல்லது சேவை வழங்குநரின் **https://www.bankeauctions.com** இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைக் காண்க.

கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) & 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு

இந்த அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002–இன் கீழும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) அதனுடன் 9(1) ஆகியவற்றின்படியும் மேற்குறிப்பிட்ட கடன் கணக்கின் கடன்தாரர்களுக்கு மேற்கண்ட நாளிலும் நேரத்திலும் e–ஏல முறையிலான ஏலம் / விற்பனை நடைபெற உள்ளது பற்றியும் விரும்பினால் மேலே கூறியபடி நிலுவைத் தொகைகளை **16.09.2023** வரையான மேல் வட்டி மற்றும் அனைத்துச் செலவினங்கள், கட்டணங்கள், செலவுகள் ஆகியவற்றுடன் விற்பனை முடிவதற்கு முன் எந்த நேரத்திலும் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக் கொள்ளும்படியும் அறிவுறுத்தும் 30 (முப்பது) நாளுக்குக் குறையாத இன்றியமையா அறிவிப்பும் ஆகும். தொகையைச் செலுத்தத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அலுவலரின் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விருப்புரிமைக்கேற்ப கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(5)–இன் பரிந்துரைக்கப்பட்டுள்ள எந்த முறையின்படியும் விற்பனை செய்யப்படும்.

நாள்: 21.09.2023
இடம்: சென்னை

(கார்த்தி கோவிந்தசாமி) அதிகாரப்பூர்வ அலுவலர், கைப்பேசி எண்: 9344684194
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட். (ஓம்காரா PS 33/2020–21 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்)

SBI

பாரத ஸ்டேட் பாங்கு
ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளை,
கோயமுத்தூர் (10204)
எண்.377/1, டாக்டர் நஞ்சப்பா ரோடு
N.S.பழனியப்பா நர்சிங் ஹோம் பின்புறம்
கோயமுத்தூர் - 641 018. போன் : 0422-2233450.

அதிகாரம் பெற்ற அலுவலர்
திரு.D.பார்த்தசாரதி
மொப